**இயல் 4`** **அலகுத் தேர்வு** **UNIT E 4/1**
**நேரம் : 1.30** **வகுப்பு : 12** **மதிப்பெண் : 50**

**பலவுள் தெரிக** **6 X 1 = 6**

1. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள். **(மார்ச் 2020 , ஜூன் 2023)**

அ) போர்க்கருவி ஆ ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ ) வேளாண் கருவி

2. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க. **(ஆகஸ்ட் 2022, மார்ச் 2024)**

அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச்சாறு
இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

3. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்? **(பெ.ஆ.க. 1,2. செப் 2021 )**

அ ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

4. 'விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு" தொடர்தரும் முழுமையான பொருள்.

அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு
ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு
இ) வெண்மதியும் முகிலும் வேறு வேறு
ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு

5. சுரதா நடத்திய கவிதை இதழ் **(பெ.ஆ. க -2, மார்ச் 2020, 2023)**

அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

6. வெண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம்? பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக

அ) கண்ணிரண்டும் _______________ (இலாதார் /இல்லார்) **(ஆகஸ்ட் 2022)**

**குறுவினா ( எவையேனும் மூன்றனுக்கு மட்டும் )** **3 X 2 = 6**

7.வசனம், கவிதை வேறுபாடு தருக **(பெ.ஆ.க. 6, மார்ச் 2020, 2024)**

8. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை? **(பெ.ஆ.க . 2, செப் 2020, செப் 2021)**

9. 'முறை வைப்பது' என்றால் என்ன? **(பெ.ஆ.க -6)**

10. எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' யார்க்கு? **(பெ.ஆ.க 2, மார்ச் 2023)**

**சிறுவினா ( எவையேனும் மூன்றனுக்கு மட்டும் )** **4 X 3 = 12**

11. “வாயிலோயே” எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக **(பெ.ஆ.க-4 , மே 2022. ஆகஸ்ட் 22, மார்ச்.23)**

12.எழுத்தாணிகள் - குறிப்பு வரைக. **(பெ.ஆ.க.4,செப் 2020,மே 2022)**

13. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க **(செப் 2021, மார்ச் 2024)**

14. "மூன்றான காலம் போல் ஒன்று" எவை? ஏன்? விளக்குக
**( பெ.ஆ.க. 6 , ஜூன் 2023**

**மொழிப்பயிற்சி வினாக்கள் 6 X 2 = 8**

15.**தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**
மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.
**(பெ.ஆ.க. 1,மே 2022, ஜூன் 2023 )**

**16. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க**
தாமரை **(ஆகஸ்ட் 2022 , மார்ச் 20 24)**
தாமரை தா மரை தாவுகின்ற மான்

**17. இலக்கணக்குறிப்பு தருக**
**அ )** அறிவும் புகழும் **ஆ)** அடையா

**18. புணர்ச்சி விதி தருக**
**அ)** எத்திசை

**19.**ஈரசைச் சீர்கள் எத்தனை? அவை யாவை? **(மார்ச் 2020)**

**20 . கலைச்சொல் தருக**
**அ )** Conveyor Belt **ஆ)** Passport **( மார்ச் 2023 )**

**மொழிப்பயிற்சி வினா 1 X 4 = 4**

21.பழமொழிகளை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.
அ) ஊழி பெயரினும் தாம் பெயரார் **(மார்ச் 2020, மே 2022 , மார்ச் 2024 )**

**நெடுவினா ( ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் ) 1 X 6 = 6**

22.பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.
**( பெ.ஆ.க. 4,6 ,மே 2022, ஆகஸ்ட் 2022,மார்ச் 2024 )**

23."சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை? **(பெ.ஆ.க. 3, மார்ச் 2020, மார்ச் 2024)**

**அடிமாறாமல் மனப்பாடலை எழுதுக. 1 X 4 = 4**

24. "விண்வேறு ; விண்......."எனத் தொடங்கும் பாடல் **( மே 2022 )**

**குருசடி ஜெலஸ்டின் , முதுகலைத் தமிழாசிரியர், கார்மல் மேல்நிலைப் பள்ளி , நாகர்கோவில் . 9843448095.**

**இயல் 4`** **அலகுத் தேர்வு** **UNIT E 4/1**
**வகுப்பு : 12**
**விடைகள்**

---

**பலவுள் தெரிக** **6 X 1 = 6**

1.இ) இசைக்கருவி
2.இ) கடுக்காய்
3.ஆ) கணிதம்
4.ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு
5.ஆ) காவியம்
6.இலாதார்

---

**குறுவினா ( எவையேனும் மூன்றனுக்கு மட்டும் )** **3 X 2 = 6**

**7.வசனம்**

மக்கள் பேசும் எளிய சொற்கள் தொடர்களாக அமைவது. வசனம் அடியளவும் யாப்பிலக்கணமும் இல்லாமல் அமைக்கப்படுவது.

**கவிதை**

யாப்பிலக்கண நெறகளுக்கு உட்பட்டு அமைவது கவிதை. யாப்பில் வந்து அடங்கும் வார்த்தைகளே கவிதை.

---

**8. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள்**

**தமிழ்**

நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம்,

**நீதி நூல்கள்**

ஆத்திசூடி, கொன்றை வேந்தன்

**கணிதம்**

கீழ்வாயிலக்கம். மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய பலவகை வாய்பாடுகள்.

---

**9.முறைவைப்பது**

உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுக்க மாணாக்கன் அதனைப் பின்பற்றிச் சொல்லுவான். இப்படி உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதை மாணாக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை 'முறை வைப்பதென்று கூறுவார்கள்.

---



www.Padasalai.Net

10. கல்வியும் கலைத்திறனும் மிக்க புலவர்களுக்கு இவ்வுலகில் எத்திசையில் உணவு தவறாமல் கிட்டும்.

---

**சிறுவினா ( எவையேனும் மூன்றனுக்கு மட்டும் )** **4 X 3 = 12**

11. தன்னை நாடிவரும் அனைவருக்கும் அவரவர் தேவையறிந்து வாரி வழங்கும் வள்ளல் அதியமான் நெடுமான் அஞ்சி.
தன்னை நாடிவருவோர்க்கு இல்லை என்று சொல்லாதவன் என்பதை **"பரிசிலர்க்கு அடையா வாயிலோயே!"** என்ற வரிகள் மூலம் அறியலாம். இதன் மூலம் அதியமானின் கொடைத் தன்மை புலனாகின்றது.

விரைந்து ஓடும் குதிரையைத் தன் படையில் கொண்டவன் என்பதை, **"கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி"** என்ற வரிகள் மூலம் அறியலாம். இதன் மூலம் அதியமானின் படைச்சிறப்புப் புலனாகிறது.

இவ்வாறு அதியமானின் கொடைத்தன்மையும், படைத்தன்மையும் (வீரம்) புலனாவதால் இப்பாடல் பாடாண் திணையைச் சார்ந்ததாகும்.

---

**12.எழுத்தாணிகள்**

ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணிகளில் பலவகை உண்டு, எழுத்தாணியை ஊசியென்றும் கூறுவர். எழுத்தாணியில் மடக்கெழுத்தாணி வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி எனப் பலவகை உண்டு.

ஒரு பக்கம் வாருவதற்குக் கத்தியும் மறுபக்கம் எழுதுவதற்கு எழுத்தாணியும் உடைய எழுத்தாணிகள் இருந்தன. ஒரு பக்கத்தில் இரண்டு கத்தியும் ஒரு பக்கம் இரண்டு எழுத்தாணியும் உள்ள மடக்கெழுத்தாணியும் இருந்தன. ஒரு பக்கத்தில் மிக நுண்ணிய எழுத்துகளாக இருபது முப்பது வரிவரையில் எழுதுவதற்குரிய மெல்லிய எழுத்தாணியும் இருந்தது.

---

**13. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்**

ஆசிரியர் முதலில் மணலில் எழுத்தின் வரிவடிவை எழுதுவார். மாணாக்கர் ஒலி வடிவை நன்றாகச் சொல்லத் தெரிந்த பின்புதான் வரிவடிவை ஓலையில் வரைந்து காட்டுவார். ஓலையை இடக்கையில் பிடித்து, வலக்கையால் எழுத்தாணியைக் கொண்டு எழுதிப் பழக்குவார்.

எழுத்தாணியைப் பிடித்து எழுதும்போது ஓலையைத் தான் நகர்த்துவார். எழுத்தாணி பிடித்த இடத்திலிருந்தே வரையும்.

கல்வெட்டுகளில் கல்தச்சர்களால் சிற்றுளி கொண்டு எழுத்துகள் பொறிக்கப்பட்டன. களிமண் பலகையிலும் எழுத்தாணி கொண்டே எழுதினர்.

காலம் செல்லச் செல்ல எழுதுகோலைப் பயன்படுத்திக் காகிதங்களில் எழுதும் முறையைக் கற்றுக் கொண்டனர். காகிதங்களில் எழுதும்போது கையை நகர்த்தி எழுதுவர்.

**14. "மூன்றான காலம் போல் ஒன்று"**

எண்ணம், வெளியீடு கேட்டல் என்ற மூன்றும், மூன்றான காலம் போல் ஒன்றாகும்.

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்றும் மூன்றும் வெவ்வேறு நிகழ்வுகளைக் குறிக்கும் என்றாலும் 'காலம்' என்னும் போது ஒன்றாகவே தோன்றும். அதுபோல எண்ணம் என்பது வேறு: வெளியீடு என்பது வேறு; கேட்டல் என்பது வேறு.

இவை மூன்றும் தனித்தனிப் பொருளைக் குறித்தாலும், இவற்றின் விளைவு ஒன்றாகும். இவை எப்போதும் ஒன்றல்ல; ஒன்று என எண்ணும் போது காலம் போல் ஒன்றாகின்றது.

---

**மொழிப்பயிற்சி வினாக்கள்** **6 X 2 = 8**

15.**தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**

**வானம்** பார்த்த பூமியில் **பயறு** வகைகள் பயிரிடப்படுகின்றன.

---

**16. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க**

தாமரை மலர் நமது நாட்டின் தேசிய மலராகும்.

புலி வேட்டையாடும் போது வேகமாகத் தா(வும்) மரையின் (தாவுகின்ற மானின்) ஓட்டம் நம்மை மெய்சிலிர்க்க வைக்கும்.

---

**17. இலக்கணக்குறிப்பு தருக**

**அ )** அறிவும் புகழும் - எண்ணும்மை

**ஆ)** அடையா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

---

**18. புணர்ச்சி விதி தருக**

**அ)** எத்திசை - எ + திசை

விதி : இயல்பினும் விதயினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் < எத்திசை

---

**19.** ஈரசைச் சீர்கள் இரண்டு வகைப்படும். அவை ,

மாச்சீர் (தேமா, புளிமா)

விளச்சீர் (கருவினம். கூவிளம்)

---

**20 . கலைச்சொல் தருக**

**அ )** Conveyor Belt - ஊர்திப்பட்டை

**ஆ)** Passport - கடவுச்சீட்டு

---

**மொழிப்பயிற்சி வினா** **1X4 = 4**

**அ) ஊழி பெயரினும் தாம் பெயரார்**

**பழமொழி விளக்கம்:**

சான்றாண்மை என்னும் குணம் உடையவர்கள் உலகமே அழியும் ஊழிக்காலம் வந்தாலும் தம் நிலையில் இருந்து வேறுபடாமல் இருப்பர்.

**வாழ்வியல் நிகழ்வு:**

என் மாமா வேதமாணிக்கம் மிகவும் அன்பானவர். உண்மையானவர்: நேர்மையானவர். எங்கள் ஊரில் அவருக்கு என்று சிறப்பான பெயர்களும் உண்டு. எச்சூழ்நிலையிலும் தன் சான்றாண்மை என்னும் குணத்தில் இருந்து அவர் வேறுபட்டதில்லை. அவருடைய சொல்லுக்கு எங்கள் கிராமமே கட்டுப்படும் அந்த அளவிற்கு நல்ல குணம் உடையவர்.

எங்கள் கிராமத்திற்கு உட்பட்ட பஞ்சாயத்திற்கான தேர்தல் வந்தது எங்கள் பக்கத்துக் கிராமத்தைச் சார்ந்த பெரும் பணக்காரர் ஒருவர் தேர்தலில் போட்டியிட இருப்பதாகச் செய்தி வந்தது. எங்கள் கிராமத்தைச் சார்ந்த படித்த பண்புள்ள இளைஞன் ஒருவனும் தேர்தலில் போட்டியிடுவதாகத் தெரிவித்தான்.

ஆண்டு முழுவதும் மழையில்லாததால் விவசாயம் நடைபெறவில்லை. என் மாமாவின் மகள் திருமணம் இன்னும் ஒரு மாதக் காலத்தில் நடக்க இருந்தது. இதனை அறிந்த பக்கத்துக் கிராமத்தைச் சார்ந்த போட்டியாளன் என் மாமாவிற்குத் தூது அனுப்பி, அவர் மகளின் திருமணத்திற்கு உரிய செலவு அத்தனையும் பார்ப்பதோடு இன்னும் அதிகமாகப் பணம் தருவதாக வாக்குறுதி கொடுப்பதாகவும் தேர்தலில் தனக்குச் சாதகமாக ஊர் மக்களை வாக்களிக்குமாறு கூற வேண்டும் என்றும் கூறி அனுப்பியிருந்தான்.

அவ்வாறு நடைபெறவில்லையெனில் அவரதுஉயிருக்கு ஆபத்து வரும் என்றும் எச்சரிக்கை விடுத்திருந்தான் என் மாமாவோ என்ன நடந்தாலும் பரவாயில்லை. உண்மையானவர்களுக்கே வாக்களிக்க வேண்டும் என்றும். என் உயிர் போவது பற்றிக் கவலையில்லை என்றும், என் மகளின் திருமணம் மிகச் சிறப்பாக நடக்கும் என்றும் கூறினார், ஊழிபெயரினும் தாம் பெயராமல் தமது சான்றாண்மைப் பண்பை அவர் வெளிப்படுத்தினார்.

**நீதி :**

சுயநலத்திற்காகத் தான் கொண்ட கொள்கையில் இருந்து ஒருநாளும் நிலைதடுமாற மாட்டார்கள். சான்றாண்மை என்னும் குணம் படைத்தவர்கள்.

---

**நெடுவினா ( ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் ) 1 X 6 = 6**

**22.பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகள்**

**முன்னுரை:**

கல்விமுறை காலந்தோறும் மாற்றமடைந்து வருகிறது. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைப் பற்றி விரிவாகக் காண்போம்.

**கல்வி தொடக்கம்:**

பிள்ளைகள் ஐந்து வயதில் கல்வி கற்கத் தொடங்கினர். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை, கல்வி கற்கும் பொருட்டு ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுத்தனர்.

**முறை வைப்பு:**

உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுப்பார். மாணவர்கள் உபாத்தியாயர் சொல்வதைக் கேட்டு, திரும்பச் செல்வர்.இதற்கு முறைவைப்பு என்று பெயர்.

**எழுத்துப் பயிற்சி:**

பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவர். ஆசிரியர் முதலில் தரையில் எழுத அதனமேல் பிள்ளைகள் எழுதுவர். பின்பு தாமே எழுதிப் பழகுவர்.எழுத்துகள் வரவரிசையாகவும், நன்றாகவும் அமைய இப்பயிற்சி உதவும்

**மனனப் பயிற்சி**

மாணவர்கள் அடிப்படை நூல்களை மன்னம் செய்வர்.தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம் நீதி நூல்கள் முதலியன பாடமாக இருக்கும்.கணிதத்தில் கீழ்வாயிலாக்கம், மேல்வாயிலக்கம். குழிமாற்று முதலிய பல்வகை வாய்பாடுகளை மனனம் செய்வர். அந்தாதி எதுகை மோனைகளைக் கொண்டு செய்யுளை ஞாபகப்படுத்திக் கொள்வர்.

**வாதம் புரிதல் :**

கல்வியில் வாதம் புரிதல்' நம் நாட்டுப் பள்ளிக் கூடங்களில் இருந்தது. கல்வியில் சிறந்தோர் அரசவைகளில் வாது புரித்து தம் கல்வித் திறமையை நிலை நாட்டுவர். வாதுபுரியும் பழக்கம் பள்ளியில் கற்குங்காலத்தே பயிற்றுவிக்கப்படும்.

**ஆசிரியர் மாணவர் உறவுநிலை:**

தவறு செய்யும் மாணவர்களுக்கு கொடிய தண்டனைகள் தரப்படவில்லை.

ஆசிரியர்கள், மாணவர்களை அன்பால் வழி நடத்தினர். ஆசிரியர்கள் மீது பற்றும் மரியாதையும் மாணவர்களுக்கு இருந்தது.

சாந்துணையும் கற்றல்:

பள்ளிக்கூடத்தில் கற்கும் காலம் கடந்த பின்னரும், பல்வேறு கலைகளைக் கற்கும் பொருட்டு ஆசிரியர்களைத் தேடிச் சென்று வாழ்நாள் முழுவதும் கற்றனர்.

**முடிவுரை :**

பண்டைக்காலக் கல்வி முறையில் உண்டான நற்பயன்கள். நற்பண்புகள் போன்றவற்றை அறிந்த போற்றுவோம்.

---

**23."சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு"**

**சாலை வசதிகளும் விபத்துகளும்:**

உலகிலேயே அதிக சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு இந்தியா. 53 இலட்சம் கி.மீ. சாலைகள், 21 கோடிக்கும் மேற்பட்ட ஊர்திகள் உள்ளன.ஓர் ஆண்டிற்கு ஏறக்குறைய ஐந்து இலட்சம் விபத்துகள் நடக்கின்றன.தமிழ்நாடு இந்தியாவிலேயே மிகுந்த சாலை விபத்துகள் நடக்கும் மாநிலமாக இருக்கிறது.

**சாலை விபத்துகள் ஏற்படக் காரணங்கள்:**

விபத்துகளுக்கு, பெரும்பாலும் மனிதத்தவறுகளே காரணங்களாக அமைகின்றன. முறையான ஓட்டுநர் பயிற்சியின்றி வாகனங்களை இயக்குவது. இரு சக்கர வாகனத்தில் தலைக்கவசம் அணியாமல் செல்வது. இரண்டு பேருக்கும் மேற்பட்டோர் இரு சக்கர வாகனத்தில் பயணிப்பது. கைப்பேசியில் பேசிக்கொண்டே வாகனம் ஓட்டுவது.

சாலையில் ஊர்தியைக் குறுக்கும் நெடுக்குமாக இயக்குவது. போட்டி பந்தயம் எனச்சொல்லி, உச்ச வேகத்தில் ஓட்டுவது. காதணிக்கேட்பிகள் பொருத்திக் கொண்டு ஊர்திகளை ஓட்டுவது. தட்பவெப்பநிலை, இயந்திரக்கோளாறு, மிகுதியான ஆள்களையோ சரக்குகளையோ ஏற்றிச்செல்வது. தொடர்வண்டி இருப்புப் பாதைகளைக் கவனிக்காமல் கடப்பது.

இதுபோன்ற பலவேறு காரணங்களால் பெரும்பாலான சாலை விபத்துகள் நடைபெறுகின்றன.

**சாலை விபத்துகளைத் தவிர்க்க, நாம் செய்ய வேண்டுவன:**

சாலை விதிகள் மற்றும் விபத்துகளைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். சாலைகளில் இடம்பெற்றிருக்கும் உத்தரவு குறியீடுகள். எச்சரிக்கைக் குறியீடுகள், தகவல் குறியீடுகளை அறிந்து, அதற்கேற்ப வாகனங்களை இயக்க வேண்டும் . சாலைச்சந்திப்புகளில் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை, . தேவையான இடங்களில் சரியான சைகையைச் செய்ய வேண்டும்.

மிகுவேகமாக ஊர்தியை இயக்கக் கூடாது. சாலையில் விளையாடுவது. கவனிக்காமல் சாலையைக் கடப்பது. சாலையை அடைத்துக் கொண்டு செல்லது. ஓடும் பேருந்தில் ஏறுவது இறங்குவது, பேருந்தின் படிக்கட்டில் தொங்கிக் கொண்டு பயணம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

மோட்டார் வாகனச் சட்டத்தை அறிந்து, அதனை முறையாக கடைப்பிடித்தல் வேண்டும்

சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு:

18 வயது நிறைவடையாதோர் வாகனங்களை இயக்கக் கூடாது.அபாயகரமான முறையில் ஊர்தியை இயக்கக் கூடாது.மது குடித்து விட்டு வாகனத்தை ஓட்டக் கூடாது. தலைக்கவசம் அணியாமல் இருசக்கர ஊர்தியை இயக்கக் கூடாது.

ஊர்திகளுக்கு காப்பீடு பெறுவது இன்றியமையாதது.

மேற்கண்ட அரசின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி இதர சாலைப் பயனாளிகளை நண்பராக எண்ணி, நாம் செயல்படும்போது, 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு உருவாகும்.

---

**அடிமாறாமல் மனப்பாடலை எழுதுக.** **1X 4 = 4**

24. “விண்வேறு ; விண்.......”எனத் தொடங்கும் பாடல்

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு

**குருசடி ஜெலஸ்டின் , முதுகலைத் தமிழாசிரியர், கார்மல் மேல்நிலைப் பள்ளி , நாகர்கோவில் . 9843448095.**

---

www.Padasalai.Net